# வடக்கு மாகாண சபை – 2018

----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

வடக்கு மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாணசபை சட்டத்தின் 23(1) ஆம் பந்தியின் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாணசபைச் சட்டத்தின் 23(2) ஆம் பந்தியின் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 28 யூன் 2019 ஆம் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 31 ஒக்தோபர் 2019 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் பிரிவின் பிரகாரம் இவ் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடக்கு மாகாண சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் மற்றும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினது பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நோக்கினை தரக்கூடியவாறு தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாணசபையின் ஆளுகைக்கு பொறுப்பனவர்களே மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான மேற்பார்வைக்கும் பொறுப்பானவர்களாவார்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 16(1) இன் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலக்கூடியவாறு தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள்

அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தியிருந்தேன்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமான பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் இயந்திரப் பகுதியினால் 01 சனவரி 2018 தொடக்கம் 31 மே 2019 வரையான காலப்பகுதிகளில் சேகரிக்கப்பட்டிருந்த வாடகை வருமானம் ரூபா 642,750 வர்த்தக முற்பணக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | உண்மையான வருமானம் இனங்காணப்பட்டு வர்த்தக முற்பணக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | விசாரணை செயன்முறையிலுள்ளது. |

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (01) | இரு அமைச்சுக்கள் மற்றும் பத்து திணைக்களங்களின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியினை நேர் முன்னைய ஆண்டின் இறுதி மீதியுடன் ஒப்பிட்டு தெரிவுச் செவ்வை அடிப்படையில் பரிசீலனைக்குட்படுத்தியதில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கூட்டுமொத்த பெறுமதி ரூபா. 709.42 மில்லியனால் வேறுபட்டிருந்தது. | சென்ற ஆண்டின் இறுதி மீதி நடைமுறை ஆண்டின் ஆரம்ப மீதியாக கொண்டுவரப்படுதல் வேண்டும். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஆரம்பச் சொத்துக்கள் முன்கொண்டுவரும்போது ஏற்பட்ட தவறுகள் காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டுள்ளது. |
| (02) | மீளாய்வாண்டின் இறுதியில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் போக்குவரத்து உபகரணங்களின் கூட்டுமொத்த பெறுமதியான ரூபா. 6.84 மில்லியன் நிதிக் கூற்றுக்களுக்கு ரூபா. 1,260.68 மில்லியனாக கொண்டுவரப்பட்டிருந்தமையால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா. 1,253.84 மில்லியனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான நடைமுறையல்லா சொத்துக்களின் மீதிகள் வெளிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். | கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று தயாரிக்கும்போது ஆரம்பச் சொத்துக்கள் முன்கொண்டுவரும்போது ஏற்பட்ட தவறுகள் காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது இத்தவறு தொடர்பாக உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| (03) | மீளாய்வாண்டில் மாகாண இறைவரி திணைக்களத்திற்குரித்தான | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான | தவறுதலாக உள்ளடக்கப்படவில்லை. இனி வருங்காலங்களில் |

| | | |
|---|---|---|
| இரு மோட்டார் வாகனங்களின் கூட்டுமொத்த பெறுமதி ரூபா. 1.38 மில்லியன் மூலதனச் சொத்துக்களின் கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையல்லா சொத்துக்களின் மீதிகள் வெளிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். |

## 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பற்றுச்சீட்டுக்கள், கூறுவிலைகள் பங்குபற்றியோர் பட்டியல், வேலைப் பொறியியலாளரின் அத்தாட்சிப்படுத்தல், இயந்திரப் பொறியியலாளர் அறிக்கை மற்றும் பாடசாலை தரிசிப்புக்களை பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்தல் போன்ற அவசியமான சான்றுகள் திணைக்களங்களில் காணப்படாமையால் ரூபா 13.30 மில்லியன் கூட்டுத்தொகைக்குரிய 136 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கொடுப்பனவிற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டினை சான்றுபடுத்தும் போது உரிய சான்றுகளுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். | சான்றுகள் இன்மை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுவதுடன் தெடர்புடைய அமைச்சுக்கள் திணைக்களங்களிற்கு அவற்றை உடனடியாக சான்றுப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வடக்கு மாகாண கௌரவ ஆளுனரின் பணிப்புரைக்கமைவாக சிரேஷ்ட கலைஞர்கள் மற்றும் இலக்கிய வாதிகளுக்கான “நிதிசார் உதவுகை (Financial Assistance)” என்பதற்கு பதிலாக அவர்களுக்கான | பயனாளிகள் தெரிவு உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். | தற்போது இத்தவறு திருத்தப்பட்டு “நிதிசார் உதவுகை” என்றே பாவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2017 ஒக்ரோபர் மாதத்திலிருந்தே கலைஞர்களின் உயிர் |

| | | |
|---|---|---|
| “ஓய்ூதியம் (Pension)” என பெயர்மாற்றம் செய்யப்பட்டு 12 தொடக்கம் 41 பயனாளிகளுக்கு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையும் வழங்கப்பட்டிருந்த மொத்த கொடுப்பனவு கூட்டுமொத்தம் ரூபா. 13.74 மில்லியன் பயனாளிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமைக்கான உறுதிப்படுத்திப்படுதல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வாழ்வு சான்றிதழ் பெறப்பட்டு உதவு தொகையானது அவர்களின் தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் உதவு தொகை பெற்றுக் கொண்டமைக்கான சான்று கலாசார உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | | |
| | ரூபா மில்லியன் | | | |
| (அ) வடக்கு மாகாண சபையின் நிதி விதிகள் | | | | |
| (i) இலக்கம் 69 | - | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரு ஆண்டுகளில் நேர் | குறித்த நிதி ஒழுங்கு விதியுடன் | யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விபத்துக்குள்ளாகியிருந்த யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பத்து வாகனங்கள் தொடர்பிலான தகவல்கள், விசாரணை அறிக்கைகள் நாளதுவரை கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | இணங்குதல் வேண்டும். | திணைக்களம் போதுமான ஆவணங்களை சமர்ப்பிக்கத்தவறியதால் இவ்விடயம் முடிவுறுத்தப்படாத நிலையில் உள்ளது. |
| (ii) இலக்கம் 106 | **1.38** | மீளாய்வாண்டிலும் நேர் முன்னைய ஆண்டுகளிலுமாக கூட்டுமொத்தமாக ரூபா 1.38 மில்லியன் பெறுமதியான 54 கொடுக்கல் வாங்கல்கள் அத்தாட்சிப்படுத்தல் மேற்கொள்ளாது தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த நிதி ஒழுங்கு விதியுடன் இணங்குதல் வேண்டும். | ஆரம்ப விசாரணைக்குழு அறிக்கையின் சிபார்சிற்கமைய மீள 14.03.2019 ஆம் திகதி விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப்பெற்றதும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) இலக்கம் 108.5 | 0.64 | கொடுப்பனவிற்குரியவர் சரியாக அடையாளங்காணப்பட்டிருக்காது யாழ் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பல்வேறுபட்ட வேலைகளிற்காக 18 கொடுப்பனவுகள் கல்லூரியின் ஆசிரியர் ஒருவருக்கும் ஆசிரியரின் கணவருக்கும் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த நிதி ஒழுங்கு விதியுடன் இணங்குதல் வேண்டும். | ஆரம்ப விசாரணைக்குழு அறிக்கையின் சிபார்சிற்கமைய மீள 14.03.2019 ஆம் திகதி விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) இலக்கம் 433 | - | மீளாய்வாண்டில் செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையின் LW-0118 இலக்க வாகனத்தின் மூன்று மாத மாதாந்த ஓட்டநேர அட்டவணையும் 52-5087 இலக்க வாகனத்தின் ஆறு மாத மாதாந்த ஓட்டநேர அட்டவணையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிதி ஒழுங்கு விதியுடன் இணங்குதல் வேண்டும். | விசாரணை செயன்முறையிலுள்து. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் VI இன் பிரிவு 7.1 | 0.14 | வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மூன்று அலுவலர்களுக்கு மீளாய்வாண்டில் அவர்கள் முன்னறிவித்தலின்றி கடமைக்கு சமூகமளித்திருக்காமை காரணமாக உடனடியாக பதவிவறிதாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காது 03 தொடக்கம் 06 மாதங்கள் வரை தாமதித்திருந்ததுடன் அக்காலப்பகுதிக்கான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | தாபனவிதிக் கோவைப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாணக்கல்வி அமைச்சு உத்தியோகத்தர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றுவதனல் தொடர்பாடலில் ஏற்பட்ட காலதாமதங்களால் இவருக்கு பதவி வறிதாக்கல் கடிதம் காலதாமதமாக வழங்கப்பட்டுள்ளது.<br><br>நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் 2018.08.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பதவி வெறிதாக்கல் அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ந்து 2018 – யூன் மாதம் தொடக்கம் சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | அரச நிர்வாகச் சுற்றிக்கைகள் 10 யூலை 2015 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்கம். | - | மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தில் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ள 20 வாகனங்களினை அகற்றி முடிவுறுத்துவது தொடர்பில் 28.06.2109 நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையை பின்பற்றி உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாவனைக்குட்படுத்த முடியாத வாகனங்களில் ஏழு வாகனங்கள் ஏல விற்பனை செய்வதற்கும் ஏழு வாகனங்கள் பிரதம செயலாளரின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யவும் ஆறு வாகனங்கள் திருத்தம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | வடக்கு மாகாண பொது நிர்வாக சுற்றறிக்கை | | | | |
| | இலக்கம் NP/02/2009(07) | - | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடமையாற்றும் 27 அலுவலர்கள் கடந்த 07 தொடக்கம் 35 ஆண்டுகளாக வருடாந்த இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். | 5 உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தபோதும் இடமாற்றம் வழங்கப்படவில்லை. கீழ் மட்ட உத்தியோகத்தர்கள் என்பதனால் யாழ்மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் வழங்கப்படுவதில்லை. |
| (உ) | நிதியமைச்சின் சுற்றுநிருபங்கள் | | | | |
| | 14 யூலை 2015 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்கம் | 0.43 | ஆளுநர் செயலகம், மகளிர் விவகார அமைச்சு, மற்றும் இரு திணைக்களங்களில் பதவிநிலைத்தரத்தில் அல்லாத 20 உத்தியோகத்தர்களுக்கு நிமித்த முற்பணங்கள் வழங்கப்பட்டு அவை 01 தொடக்கம் 03 மாதங்கள் தாமதித்து தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். | சுற்றுநிருபத்திற்கமைய பதவிநிலை உத்தியோகத்தருக்கு மட்டும் உபகட்டுநிதி வழங்கி உரிய கால எல்லைக்குள் தீர்வுசெய்ய அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | | |
| **(i)** | இல 371 | 0.72 | நிமித்த முற்பணமானது குறித்த தேவை நிறைவு செய்தவுடன் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதாக இருந்த போதிலும் 31 சந்தர்ப்பங்களில் குறித்த தேவையினை நிறைவு செய்து தொடர்ந்து வரும் 20 தொடக்கம் 155 வரையான நாட்கள் தாமதித்து 10 அலுவலர்களினால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | குறித்த நிதி ஓழுங்கு விதியுடன் இணங்குதல் வேண்டும். | நிமித்த கட்டுநிதி முற்பணமாக வழங்கப்படும் நோக்கம் நிறைவுபெற்றதும் உரிய கால இடைவெளிக்குள் சீர்செய்வதற்கான அறிவுறுத்தல்கள் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் விசேட |

கவனம் செலுத்தப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(ii)** | இல 571 | - | மீளாய்வாண்டில் மன்னார் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகங்கள், மாகாண கட்டடங்கள் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பவற்றில் 84 வைப்புக்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காது பொது வைப்புக் கணக்குகளில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | குறித்த நிதி ஒழுங்கு விதியுடன் இணங்குதல் வேண்டும். | ரூபா 1.35 மில்லியன் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ரூபா 1.35 மில்லியன் அரச வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மற்றும் ரூபா 8.2 மில்லியன் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 1.7 போதியளவு அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

வடக்கு மாகாண சபையினால் முறையான அதிகாரம் இல்லாமல் கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வடக்கு மாகாணத்தின் மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தினால் 2007 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தின் ஆறு பாடசாலைகளில் 02 அதிபர்கள், 151 ஆசிரியர்கள் மற்றும் 17 அலுவலகப்பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுமொத்தம் | சீர் செய்ய உரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 6 பாடசாலைகள் கல்வி அமைச்சின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்டது இதன் பிரகாரம் 50 வது நிலையியல் கட்டளை பிரகடனப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் வலயக்கல்வி அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றது. ஆயினும் தற்போது மேற்படி புத்தளத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் மன்னார் வலயத்திற்குரிய ஆசிரியர்களை வடமேல் மாகாணத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 160.09 மில்லியன் திரட்டிய சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதற்குரிய காரணங்கள், முறையான அனுமதிகள் கணக்காய்வுக்கு கிடைத்திருக்காமையால் திருப்திகரமாக ஏற்று கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | விடுவிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தின் ஆதனப்பகுதியானது 2002 சனவரி தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கேள்வி கோரல்களின்றி அவ்வலயக்கல்வி அலுவலகத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பெயர் குறிப்பிடப்பட்ட தனியார் ஒருவரினால் மாதாந்தம் முறையே ரூபா. 300 தொடக்கம் 5,000 வரையான வீச்சில் வாடகை மற்றும் இதர கட்டணங்களாக அந்நலன்புரிச் சங்கத்துக்கு செலுத்தப்பட்டு வந்திருந்தது. இங்கு 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு நலன்புரிச் சங்கத்துக்கு செலுத்தப்பட்டிருந்த மொத்த வாடகை கட்டண விபரம் 28.06.2019 ஆத் திகதி வரை வலயக்கல்விப் பணிப்பாளரினால் கணக்காய்வுக்கு | உரிய தொகை அரச வருமானத்திற்கு மாற்றப்பட வேண்டும். | இது தொடர்பாக விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

அறியக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2002 மற்றும் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் வாடகைக் கட்டணமாக கூட்டுமொத்தம் ரூபா. 135,600 அந் நலன்புரிச் சங்கத்துக்கு செலுத்தப்பட்டிருந்தமை ஏற்றுக்கொள்ளப்படாத கொடுப்பனவாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2. நிதி முகாமைத்துவம்

வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருமானப் பாதீடு சரியான பொறிமுறையை பின்பற்றி தயாரித்திருக்காமையால் ஐந்து வகையான வருமானங்கள் 12 வீதம் தொடக்கம் 52 வீதம் வரை பாதீட்டை விட குறைவாக சேகரிக்கப்பட்டிருந்தன. | பாதிடப்பட்ட அடைவு மட்டத்தினை அடைவதற்கும் நிலுவை வருமாணங்களை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

3. நிதிசார் மீளாய்வு

நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபையின் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா. 1,140,961,099 ஆக இருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா. 1,925,209,984 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான சம்பளங்களும் கூலிகளும் ரூபா. 1,585,887,496 ஆல் அதிகரித்திருந்தமையும் வைப்புக்களின் கொடுப்பனவுகள் ரூபா. 3,088,008,760 ஆல் அதிகரித்தமையுமாகும் நிதிப் பெறுபேறுகளில் ரூபா. 784,248,885 நலிவு ஏற்பட பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல் மீளாய்வு

#### அரசாங்க மானியம்

மீளாய்வாண்டில் மாகாண அபிவிருத்திக் கொடையில் இருந்து பெறப்பட்ட அரசாங்க கொடைகளும் அவற்றின் பயன்பாடுகளும் கீழ் தரப்பட்டுள்ளது.

| | மூலகங்கள் | அனுமதிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| (ஆ) | மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் (PSDG) | 3,081.87 | 1,841. 83 | 1,240.04 |
| (ஆ) | தகுதி அடிப்படையிலான அபிவிருத்தி மானியம் (CBG) | 549.06 | 531.62 | 17.44 |
| (இ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியங்கள் (கல்வி) | 79.00 | 79.00 | - |
| (ஈ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியங்கள் (சுகாதாரம்) | 424.80 | 324.79 | 100.01 |
| (உ) | பொது கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் | 27.5 | - | 27.5 |

### 4.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் மத்திய கல்வி அமைச்சினது கல்வித்துறை அபிவிருத்தி சட்டகம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் (ESDP) நிதியளிப்பின் மூலம் 289 அலுவலர்களுக்கு வடக்கு | மத்திய அரசினால் வழங்கப்பட்ட நிதி உடன்படிக்கைக்கு அமைவாக உரிய நோக்கத்திற்காக பயன்படுத்துதல் வேண்டும். | கல்வித்துறை அபிவிருத்தி சட்டகம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் (ESDP) கீழ் அதனது செயற்படுத்தலுக்காக மாகாணங்களில் அமைக்கப்பெற்று துறைசார் கண்காணிப்பு மற்றும் |

மாகாண கல்வித் திணைக்களத்தினால் கூட்டுமொத்தம் ரூபா. 5.76 மில்லியன் பெறுமதியில் பயிற்சியளித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மத்திய கல்வி அமைச்சின் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயற்பாட்டு அடிப்படையிலான பங்குடமை உடன்படிக்கை (Performance Based Partnership Agreement – PPA) இற்கமைவாக அடையப்படவேண்டிய கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு முரணாக அமைந்திருந்த பயிற்சியளித்தலாகும் மேலும் கல்வித்துறைசாராத 51 சதவீதமான ஆரம்ப மற்றும் இரண்டாம் பதவியணியினர் வகுதியைச் சேர்ந்த அலுவலர்களுக்கான உளவிருத்தி செயற்பாட்டிற்கும் பயிற்சியளிப்பு வழங்கப்பட்டிருந்தமையும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கு முரணானதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

தொழில்நுட்ப ஒத்துழைப்பு பிரிவிற்கூடாக அதனது அலுவலர்களுக்கான தகைமை விருத்தி பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். பாடவிதானங்கள் தொடர்பாக வலயங்களிலும், மாகாண மட்டத்திலும் பாடத்துறை சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் கல்வித்துறை சார் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்குவதற்காக சகல அலுவலர்களுக்கும் தேவையான குழுவாகச் செயற்பட்டு இலக்குகளை அடைதல், நிறுவனத்தினது இலக்குகளை அடைதல் போன்ற மென்திறன்கள் வட மாகாணத்தைப் பொறுத்தவரை இன்னும் வலுப்படுத்த வேண்டிய தேவை நீண்டகாலமாக உணரப்பட்டமையாலும் கடந்த வருடங்களில் இதற்கான நிதி வசதிகள் போதுமானதாக இல்லாமையாலும் அது சாத்தியமற்றுப் போய்விட்டது.

## 4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடைநிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா. 48.2 மில்லியன் பெறுமதியான பாலம்பிட்டி விவசாய பயிற்சி நிலையம், விவசாய போதனாசிரியர் அலுவலக நிர்மாண வேலைகள், வட்டக்கச்சி விவசாயப் பயிற்சி நிலைய நிர்மாண வேலைகள் மற்றும் மன்னார் வலயக்கல்வி அலுவலக படிநிலை - II இற்கான வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியினுள் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் நாளதுவரை பூரணமாக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காலப்பகுதியில் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விவசாயத் திணைக்களம்<br>பாலம்பிட்டி விவசாயப் பயிற்சி நிலையம், வட்டக்கச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் மற்றும் விவசாயப் போதனாசிரியர் அலுவலக நிர்மாண வேலை இவ்வேலைக்கான பகுதிக் கொடுப்பனவை வழங்க தாமதமானதால் விரைவுபடுத்த இயலாமல் போனது.<br><br>கல்வித் திணைக்களம்<br>ஆற்று மணலை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தடங்கல்கள், கட்டுநிதி பற்றாக்குறை போன்ற காரணங்களினால் கட்டட வேலை உரிய காலத்தில் நிறைவுசெய்யப்படவில்லை. குறித்த வேலைக்கான கட்டுநிதியானது 2019 மே மாதம் கிடைக்கப்பெற்றுள்ளது. தற்போது குறித்த கட்டட வேலை விரைவாக நடைபெற்று வருகின்றது. |

## 4.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்பட்டிருந்த வவுனியா மாவட்டத்தில் கபடித்திடல் அமைத்தல் செயற்திட்ட வரைவுக்கு அமைவாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடையின் மூலம் 2015 ஆம் ஆண்டு ரூபா 5 மில்லியன் கிரயத்தில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய வேலைகள் தொடர்பில் 2012 சனவரி 05 ஆம் திகதிய 01/2012 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பந்தி 3.2 இற்கு முரணாக நிதி நிலைமை மற்றும் வேலை முன் அனுபவங்கள் பரிசீலிக்கப்பட்டிராத மூன்று வேறுபட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு ரூபா. 5 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த வேலைகளை வகுத்தீடு செய்து கையளிக்கபட்டிருந்தமை மற்றும் 15 திசெம்பர் 2015 இல் நிறைவேற்றபடவேண்டிய மேற்படி வேலைகள் நாளதுவரையும் முடிவுறுத்தப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டன. மேலும் 2017 ஆம் ஆண்டு இவ் வேலைகளிற்கு மேலதிகமாக ரூபா. 5 மில்லியன் நிதியளிப்பு செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை கூட்டுமொத்தம் ரூபா. 8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த | சாத்தியவள ஆய்வு செய்யப்படு தேவையினை இனங்கண்டு அனைத்து கட்டுமாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும். குறித்த விளையாட்டுத் திடலினை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இவ்வேலைத்திட்டம் கல்வி அமைச்சினால் வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலகம் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. திட்ட வரைபில் 3 சமூக மட்ட அமைப்புகள் ஊடாகவே திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனுமதியும் வவுனியா தெற்கு பிரதேச செயலக மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகளின் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இவ்வேலைக்கான மதிப்பீட்டின் பிரகாரம் வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. ஆயினும் இவ்விளையாட்டுத்திடலை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு மேலும் பௌதீக ரீதியான சில கட்டடங்களை அமைக்கவேண்டியுள்ளது. |

நிலையில் கபடித்திடல் நிர்மாண வேலைகள் முற்றுப் பெறாத நிலையிலும் பாதுகாப்பு பராமரிப்புக்கள் இன்றிய நிலையிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக செயன்முன்னேற்றங்கள் அடைந்துகொள்ளப்படாத நிலையிலுள்ளமையும் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 4.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஒரு அமைச்சு மற்றும் மூன்று திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 20 நிர்மாண வேலைகளுக்குரிய பௌதீக கணிய அளவுகளை விட கணிய அளவுச்சிட்டைகள் மிகைப்படுத்தி தயாரிக்கப்பட்டு கூட்டுமொத்தம் ரூபா. 2.59 மில்லியன் மேலதிகமாக வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | உண்மையாக செய்யப்பட்ட பௌதீக ரீதியான கணிய அளவிடைகளுக்கே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய திணைக்களங்களிடம் இவ்விடயம் தொடர்பில் விளக்கம் கோரப்பட்டு கடிதம் அனுப்பப்படவுள்ளது. இதற்கான பதில் விரைவில் அனுப்பி வைக்கப்படும். |
| (ஆ) | மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடைமூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏழு வகையான ஒப்பந்த வேலைகள் ஒப்பந்ததாரர்களினால் தாமதமாக்கப்பட்டிருந்தமை தொடர்பில் அவற்றுக்கான | காலதாமத தண்டப் பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த அமைச்சு மற்றும் திணைக்களம் அடையாளங்காணப்பட்டு உரிய பதில் விரைவில் சமர்ப்பிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் ஒப்பந்த நிபந்தனை என்பவற்றுக்கமைவாக ஒப்பந்ததாரர்களிடமிருந்து கூட்டுமொத்தம் ரூபா. 2.73 மில்லியன் காலதாமத தண்டம் நாளதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

4.6 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் 227-3366 இலக்கமுடைய lorry (லொறி) வாகனம் 09.12.2017 அன்று திருத்தத்திற்காக ஓட்டோமாஸ்ரர்ஸ் நிறுவனத்திடம் கேள்வி நடைமுறை பின்பற்றப்படாது கையளிக்கப்பட்டு அதற்காக அத் திகதியின் பின்னர் 05.10.2018 ஆம் திகதி பிரதம செயலாளர் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை தவறான பெறுகை நடைமுறையாக அவதானிக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறையுடன் இணங்கிச் செயற்படுதல் வேண்டும். | ஓட்டோமாஸ்ரர்ஸ் நிறுவனம் நீண்டகாலம் இயங்காமையினால் காலம் தாழ்த்தியே கூறுவிலை பெறப்பட்டு தழுவல் அனுமதிக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குரிய 15 வாகனங்களினை உரியவாறு திருத்தம் செய்து பராமரிப்பதற்கு | வாகனங்களை விரைவாக திருத்தி பயன்படுத்த முனைதல் வேண்டும். | பத்து வாகனங்கள் பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நான்கு வாகனங்களின் திருத்த |

| | | | |
|---|---|---|---|
| | கடந்த 01 தொடக்கம் 10 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேலைகள் தற்போது நடைபெறுகின்றது. WPLB 1968 என்ற நடமாடும் ஆய்வு கூட சேவை வாகனம் தற்போது வேறு தேவைகளிற்கு மாற்றிபயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஒரு அமைச்சு மற்றும் 07 உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு உரித்தான கூட்டுமொத்தம் ரூபா. 208.36 மில்லியன் பெறுமதியிடப்பட்ட பௌதீக சொத்துக்கள் கடந்த 07 மாதங்கள் தொடக்கம் 08 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | அரச சொத்துக்களினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பதிலளிக்கப்படவில்லை. |
| (இ) | மன்னார் மாவட்டத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுலகத்தினால் உயிலங்குளம் பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தால் நிர்மாணித்து வழங்கப்பட்ட நெற்களஞ்சியமானது நாளதுவரை குறித்த நோக்கத்துக்காக உபயோகிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடைமூலம் கூட்டுமொத்தம் ரூபா. 2.78 மில்லியன் கிரயத்தில் அதே பிரதேசத்தில் பிறிதொரு நெற்களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டு நாளதுவரை விளைவற்று, பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. | தேவையினை ஆய்வு செய்து அரச நிதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும் அத்துடன் நெற்களஞ்சியம் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | இக்களஞ்சியமானது நெல் அறுவடைக்காலங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை களஞ்சியப்படுத்தும் களஞ்சியமாகவும் ஏனைய காலங்களில் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் உபகரணங்களின் களஞ்சியமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உணவு மற்றும் விவசாய நிறுவனத்தினால் (FAO) நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா. 4.93 மில்லியன் விதைநெல் சுத்திகரிக்கும் இயந்திரம் நாளதுவரை குறித்த நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட்டிராது உயிலங்குளம் நெற்களஞ்சியத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக விடப்பட்டிருந்தது. | அரச சொத்துக்கள் உரிய காலத்தில் உரிய நோக்கத்திற்கு வினைத்திறனாக பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018ம் ஆண்டில் இவ்விதைநெல் சுத்திகரிப்பு இயந்திரம் பாவனைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றது |
| (உ) | வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தின் 97 பாடசாலைகளில் மீளாய்வாண்டு மற்றும் நேர்முன்னைய ஆண்டுகளுக்கான வருடாந்த பொருட்கணக்கெடுப்பு சபையின் பரிந்துரைக்கமைவாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரககாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கைகள், கோவைகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக உரிய காலப்பகுதியில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படமுடியாதிருந்ததுடன் நடப்பாண்டில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. |
| (ஊ) | மீளாய்வாண்டில் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா. 174,675 பெறுமதியான மூன்று வகையான 236 றீம் காகிதாதிகளில் சோர்வு அவதானிக்கப்பட்டதுடன் மேலும் மீளாய்வாண்டு இறுதியில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா. 133,000 பெறுமதியான 11 பிறிதொரு | கொள்வனவு செய்வதற்கு முன்னர் கொள்வனவின் அவசியத் தன்மை இனங்காணப்பட வேண்டியதுடன் உரிய உத்தியோகத்தரிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | காகிதாதிகளின் சோர்வு தொடர்பில் வழங்கல், பெறுதல் கட்டளைகள் மற்றும் களஞ்சியப் பதிவேடுகள் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | வகையான காகிதாதிகள் 15 மே 2019 வரை அலுவலகத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |
| (எ) | 27 நொவெம்பர் 2018 அன்று விபத்துக்குள்ளாகியிருந்த சமூக சேவைகள் திணைக்களத்தின் NPPF-2051 ஆம் பதிவிலக்கமுடைய பிக்கப் வாகனத்தின் விபத்திற்குரிய காரணங்களை பொலிஸின் தகவல் புத்தகத்தின் உண்மைப்பிரதி மற்றும் ஆரம்ப விசாரணை அறிக்கை என்பவற்றுடன் தொடர்புபடுத்தி பரிசீலித்ததன் பிரகாரம் விபத்தால் எழுந்திருந்த வாகன திருத்தச் செலவு ரூபா. 162,125 இனை உண்மையாகவே அரச வாகனத்திற்கு சேதம் விளைவித்திருந்தவரிடமிருந்து அறவிடப்பட்டிருக்காது வாகன சாரதி சமாதான முறையில் விலகிச் சென்றமைக்கமைவாக இவ் வாகனத்திற்கான திருத்தச் செலவாக ரூபா. 162,125 அரச நிதியிலிருந்து செலுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. | நட்டத்திற்கு பொறுப்பானவர்களிடமிருந்து விபத்தின் திருத்தச் செலவு அறவிடப்பட வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஏ) | கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணியில் முகாமைத்துவ பயிற்சி திணைக்களத்தினால் உரிமை மாற்றம் செய்யப்படாது மீளாய்வாண்டில் ரூபா 24 மில்லியன் மாகாணசபை நிதியத்தின் செலவில் பயிற்சி | ஆதனத்தின் உரிமையினை திணைக்களத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகிற்கான கட்டட நிர்மாணப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் குறித்த செலவினை நிதிநிலைமைக் கூற்றின் ACA 6 இல் குறை |

| | | | |
|---|---|---|---|
| | நிலையத்திற்கான கட்டட வேலைகள் நடைபெற்றிருந்தன. | | வேலையாக (Work in Progress) காட்டப்பட்டுள்ளது. இவ் வேலைகள் முடிக்கப்பட்டு கட்டடத்தினை பொறுப்பேற்ற பின்னர் நிதிக் கூற்றுக்களில் சொத்தாக காட்டப்படும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மின்னுயர்த்தி கட்டுமாண வேலைகள் ஆரம்பிக்கப்படாத போதும் மின்னுயர்த்தி இயக்குனருக்கான நியமனம் 31 திசெம்பர் 2005 தொடக்கம் வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த நியமனம் ஆளணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்படாது வழங்கப்பட்டு 31 திசெம்பர் 2005 தொடக்கம் 31 திசெம்பர் 2018 வரை 13 வருடங்களிற்கான கூட்டுமொத்தமான ரூபா. 3.1 மில்லியன் சம்பளக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு சேவையின் அவசியத் தன்மை கருத்தில் கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அக்காலப்பகுதியில் மின்னுயர்த்தி இல்லாமையால் விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்தேற்றுனராக கடமையாற்றி வருகின்றார் |
| (ஆ) | யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பதவியினரின் ஆளணிகள் ஆளணி முகாமைத்துவ | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு | இவர்களின் சேவை தேவைப்படுவதால் எமது பணிமனையில் இணைக்கப்பட்டுள்ளனர். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் அனுமதிக்கப்படாத போதும் 10 வகையான பதவிகளுக்கு 16 ஆளணியினருக்கு முறையற்ற நியமனம் வழங்கப்பட்டுள்ளது. | நியமனம் வழங்கப்படுதல் வேண்டும். | |
| (இ) | யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 07 கீழ்நிலைப் பதவியணியினர் 05 தொடக்கம் 10 வரையான ஆண்டுகளாக நியமிக்கப்பட்ட பதவியிலிருந்து விடுத்து சாரதியாகவும், தடுப்பு மருந்தேற்றுனராகவும் கடமையாற்றிவருகின்றமை அவர்களது சேவைப் பிரமாணம் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அலுவலர்கள் நியமனம் பெற்ற பதவிகளிலேயே கடமையாற்ற வேண்டும் | சாரதி, தடுப்பு மருந்தேற்றுனர் பதவிக்குரிய வெற்றிடம் காணப்படுவதால் இவர்கள் மூலம் நிரப்பப்பட்டு சேவை பெறப்படுகின்றது. |
| (ஈ) | வடக்கு மாகாணத்தில் 80 சதவீதமான தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் 25 சதவீதமான மருத்துவ அலுவலர்கள் பதவி வெற்றிடமாயுள்ளமையால் கிராமப்புற பொதுமக்கள் வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மருத்துவ உத்தியோகத்தர்கள், பல் வைத்திய நிபுணர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களது நியமனங்கள் மத்திய சுகாதார அமைச்சினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. காலத்துக்கு காலம் மத்திய அரசால் நியமனங்கள் வழங்கப்பட்டு வெற்றிடங்கள் குறைவடைந்து வருகின்றது. |

## 6. சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கூட்டு சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மாகாண விவசாய அமைச்சுக்கு கூட்டுமொத்தம் ரூபா. 30 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 24 சதவீதம் சேமிப்புக்களாக காணப்பட்டன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த அத்தகைய கூட்டு சமூக பொறுப்பு செயற்பாடுகள் பற்றிய விபரம் மாகாண சபையின் சம்பந்தப்பட்ட அமைச்சு, திணைக்களங்களினாலும் கணக்காய்விற்கு அறியக் கிடைத்திருக்கவில்லை. | சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 5 மில்லியன் ரூபாவில் 2018 இல் 3.5 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி 1.5மில்லியன் ரூபாவில் 2019 மே வரை 1.1 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மிகுதி 0.4 மில்லியன் ரூபாவிற்கு உறுதிச்சீட்டு கிடைக்கப் பெற்றுள்ளது. யூன் மாதம் கொடுப்பனவு செய்யப்படும். |

## 7. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு வடக்கு மாகாண சபையின் 05 அமைச்சுக்கள், 05 அலுவலகங்கள் மற்றும் 23 திணைக்களங்களினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டம் 2019 தயாரிப்பின்போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கக் கூறுகள் மற்றும் முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் |

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களில் அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | | பயன்படுத்தப்பட்டுள்ளது. |

## 8. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 8.1 ஆண்டறிக்கையினை சபைக்கு சமர்ப்பிக்காமை

கடந்த 05 வருடங்களில் வடக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை மாகாண சபைக்கு முன்னிலைப்படுத்தலின் நிலமை பின்வருமாறு.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | சபையில் முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2013 | 2015.04.01 | 2015.11.03 |
| 2014 | 2015.12.30 | 2017.06.09 |
| 2015 | 2016.11.07 | 2018.07.25 |
| 2016 | 2018.06.19 | 2018.09.07 |
| 2017 | 2019.02.27 | -- |

### 8.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக பொதுக் கணக்கு குழுவினால் வழங்கப்பட்டிருந்த கட்டளைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஒதுக்கீட்டு வாகனம் வழங்கப்பட்டுள்ள போதும் குழும வாகனப்பாவனையினால் ஏற்பட்ட மேலதிக எரிபொருள் செலவு ரூபா 325,850 ஆகும். | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் நிதியளிப்பு மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்குரிய மோசடித் தன்மை வாய்ந்த கொடுப்பனவுகள் கூட்டுமொத்தம் ரூபா. 4.42 மில்லியன் தொடர்பில் வடக்குமாகாண பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்டிருந்த விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் நாளதுவரை கணக்காய்விற்கு அறியக் கிடைத்திருக்கவில்லை. மேலும் இம் மோசடிகள் தொடர்பில் பிரதம செயலாளரினால் எடுத்திருக்க வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கடந்த மூன்று ஆண்டுகளாக நலிவடைந்திருந்தன. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II, II இற்கு முறையற்ற நியமனம் வழங்கப்பட்டிருந்தமை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஈ) | மாகாண கல்வி அமைச்சினால் வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரிக்கு வழங்கப்பட்ட ரூபா 2.38 மில்லியன் உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாதுள்ளது. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (உ) | கடமைக்கு சமூகமளிக்காத ஆசிரியரொருவருக்கு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஊ) | க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர் தர வகுப்பிற்கான பாடநெறிக்குரிய கல்வித் தகைமைகளை கருத்தில் கொள்ளாது பட்டதாரி ஆசிரியரொருவரர் நியமிக்கப்பட்டிருந்தமை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | வவுனியா நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தின் அதிபரினால் மாணவர்களிடமிருந்து 2012 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட ரூபா 2.4 மில்லியன் நிதி தொடர்பான வலையக்கல்வி அலுவலகம் மற்றும் பிரதம செயலாளரின் விசாரனை அறிக்கை மற்றும் தொடர்பான நடவடிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஏ) | 2015 அக்டோபர் 16 அன்று விபத்துக்குள்ளாக்கப்பட்டிருந்த மன்னார் வலையக் கல்வி அலுவலகத்தின் வாகனத்திற்குரிய விசாரணை அறிக்கைகள் நாளதுவரை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் வாகனத்தை திருத்தம் செய்து பராமரிப்பதற்கு கடந்த 03 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஐ) | ஒப்பந்தகாரரின் பெறுமதிசேர் வரிப் பதிவு இலக்கத்தின் செல்லுபடித் தன்மையினை உறுதிப்படுத்தாது சிவில் வேலைகளிற்காக பிரதேச சபையினால் கூட்டுமொத்தம் ரூபா.3.16 மில்லியன் பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஒ) | வவுனியா பூந்தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டடமொன்று அத் | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அத்திணைக்களத்தினால் வாடகை கொடுப்பனவாக கடந்த 7 ஆண்டுகளாக கூட்டுமொத்தம் ரூபா. 2.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | மாகாண இறைவரித் திணைக்களத்தில் சிரேஸ்ட மட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எழுவரில் ஆறு பதவி வெற்றிடங்கள் அல்லது 86 சதவீதம் நாளது வரை நிரப்பப் பட்டிருக்காமையால் வருமான நிர்வாக செயற்பாடுகளை பயன்மிக்கதாக மேற்கொள்ள முடியாதிருந்தது. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (க) | முறையான அனுமதி பெறப்பட்டிராது யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஒப்பந்த அடிப்படையிலான கால்நடை மருத்துவர் மற்றும் பொறியியலாளர் நியமிக்கப்பட்டு கூட்டுமொத்தம் ரூபா. 0.84 மில்லியன் சம்பளம் மற்றும் ரூபா. 0.3 மில்லியன் பிரயாணச் செலவுகளுக்காக செலுத்தப்பட்டிருந்தன. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (கா) | யாழ்ப்பாணம் மாநகர சபையினால் 2014 ஆம் ஆண்டு தகைமைகளற்ற 03 தீயணைப்பாளர்கள் மற்றும் 07 மின்னியலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் மேற்படி பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புகளுக்கு முரணாக பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடைபெற்றது. எவ்வாறாயினும், 15 அக்டோபர் 2018 இல் நடைபெற்ற வடக்கு மாகாண பொதுக் கணக்குகள் குழுவின் | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைக்கு அமைவாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் நாளதுவரை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | | |
| (கி) | யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2016 ஆம் ஆண்டில் பொது முகாமைத்துவ உதவியாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்த பண மோசடி ரூபா. 2.93 மில்லியன் தொடர்பில் 15 அக்டோபர் 2018 இல் நடைபெற்ற வடக்குமாகாண பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் நாளதுவரை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (கீ) | கனரக வாகனங்களுக்குரிய சாரதி அனுமதிப் பத்திரமற்ற சாரதியினால் ஓட்டப்பட்டிருந்த கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கனரக வாகனமொன்றிற்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பு ரூபா. 1.54 மில்லியன் தொடர்பில் கடந்த இரு ஆண்டுகளிற்கு மேலாக உரிய பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (கு) | கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ரூபா 4.29 மில்லியன் செலவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட விபத்துக்குள்ளான வாகனம் தொடர்பில் நாளதுவரை ஆக்கபூர்வமான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (கூ) | வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாமல் பகுதியளவிலான அரசாங்க பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியரொருவரை மீண்டும் அரச சேவையில் நியமனம் செய்திருந்ததுடன் அவ் உத்தியோகத்தரிற்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 428,482 கூட்டுமொத்தமான சம்பளங்கள் மற்றும் கூலிகளை செலுத்தியிருந்தது. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |